இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 259 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 16 – செவ்வாய்க்கிழமை 29 ஏப்ரல் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 259 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 16 - Tuesday 29 April 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## வழக்குத் தாக்கல் செய்த ‘திராவிட மாடல்’ அரசும், வழக்கில் அருமையாக வாதிட்ட வழக்கறிஞர்களும், தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளும்

# வரலாற்றில் என்றும் நிலைத்திருப்போம்!

### வாதிட்ட வழக்கறிஞர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) சென்னையில் நடைபெற்ற, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்களுக்கான பாராட்டு விழாவில், உரையாற்றினார்.

**சென்னை, ஏப்.29-**

**“வழக்குத் தாக்கல் செய்த திராவிட மாடல் அரசும், வழக்கில் அருமையாக வாதிட்ட வழக்கறிஞர்களும், தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளும் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத்தந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்குச் சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களைப் பாராட்டி சென்னையில் நேற்று முன்தினம் (27.04.2025) மாலை, நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த விழாவை பாராட்டு விழா என்று சொல்வதைவிட, வெற்றி விழா என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் எந்த மாநிலமும் எப்போதும் பெற்றிடாத இந்த மாபெரும் வெற்றிக்கு வித்திட்ட வழக்கறிஞர்களைப் பாராட்டி எல்லையில்லாத மகிழ்ச்சியோடு நாமெல்லாம் கூடியிருக்கிறோம்!

**நியமனப் பதவிகள் மூலம் - நமக்குத் தொல்லைகள் கொடுக்கும் காலம்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை - ஆளுநர் என்ற நியமனப் பதவி மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணம் கொண்டு, போட்டி அரசுகளை நடத்த தொல்லைகள் கொடுக்கின்ற காலத்தில், மிக முக்கியமான இந்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் மாண்பமை பர்த்திவாலா, மாண்பமை மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பு - தமிழ்நாட்டுக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; மக்களாட்சிக்கும் - மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி!

**ஒட்டுமொத்த மாநிலங்களும் - உச்சநீதிமன்றத்திற்கு வணக்கம்!**

ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு நிர்ணயித்தது மிகப்பெரிய வெற்றி!

“அரசியல் சாசன பிரிவு 142-இன் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது” - “இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருகிறது” என்று மாண்பமை நீதியரசர்கள் தீர்ப்பளித்தபோது, ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களும் தலைநிமிர்ந்து உச்சநீதிமன்றத்திற்கு வணக்கம் செலுத்தியது!

**வரலாற்றுச் சாசனமாக நிலைக்கப் போகும் தீர்ப்பு!**

ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வில் மாநில அரசுகளின் உரிமைகளை எக்காலத்திலும் பாதுகாத்திடும் வரலாற்று சாசனமாக இந்த தீர்ப்பு என்றென்றும் நிலைத்திருக்கும். இன்னும் பெருமையோடு சொல்கிறேன். இது இந்திய மாநிலங்களுக்கு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தால் பெற்றுத்தந்திருக்கக்கூடிய மாபெரும் விடுதலை!

இந்த அரசியல் உரிமையை - சட்ட பூர்வமான வாதங்களின் மூலமாக தமிழ்நாடு அரசு முன்வைத்து வாதாடியது. அந்த அறிவார்ந்த வாதங்களுக்குச் சொந்தக்காரர்களான வழக்கறிஞர்கள்தான் இன்றைக்கு நம்மோடு இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக, தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் டாக்டர். அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, நாடாளுமன்ற உறுப்பினர் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி அவர்களால் இந்த விழாவிற்கு வர இயலவில்லை. அவர் இங்கு இல்லையென்றாலும் தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் - அபிஷேக் சிங்வி அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - ராகேஷ் திவேதி அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞரும் - மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் அவர்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

அறிவிற்சிறந்த வழக்கறிஞர் பெருமக்களே.....

**அனைத்து மாநில மக்களுக்கும் - மக்களாட்சிக்கும் கிடைத்த வெற்றி!**

உங்களின் வாழ்க்கையில் எத்தனையோ பெரிய பெரிய வழக்குகளைப் பார்த்திருப்பீர்கள். வெற்றியும் பெற்றிருப்பீர்கள். தனிநபர்கள் - அமைப்புகள் - ஏன், தனியொரு மாநிலம் கூட அந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இந்த வழக்கின் வெற்றி என்பது, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் - அனைத்து மாநில மக்களுக்கும் - மக்களாட்சிக்கும் கிடைத்திருக்கும் வெற்றி!

இந்த மண்ணில் மக்களாட்சி இருக்கும் வரைக்கும், இந்த வழக்கும் - வலுவான வாதங்களை வைத்த நீங்களும் பேசப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள்!

**வரலாற்றில் நிலைத்திருப்போம்!**

வழக்குத் தாக்கல் செய்த தமிழ்நாடும் - வாதிட்ட நீங்களும் - தீர்ப்பளித்த நீதியரசர்களும் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருப்போம் என்பது உறுதி!

**மாநில சுயாட்சி; அடைந்தே தீருவோம்!**

இந்த தீர்ப்பு கொடுத்திருக்கும் புத்துணர்ச்சி மற்றும் நம்பிக்கையோடு தான் மாநில சுயாட்சிக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம்!

> **“உச்சநீதிமன்ற நீதிபதிகள் மாண்பமை பர்த்திவாலா, மாண்பமை மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பு - தமிழ்நாட்டுக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; மக்களாட்சிக்கும் - மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி!”**

இந்திய ஜனநாயகத்தில் மக்களாட்சிக்கு வலுச்சேர்க்க, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி, தலைவர் கலைஞர் அவர்கள் முழக்கமாக வடித்து கொடுத்ததுதான் “மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி” என்ற இலக்கு!

அந்த இலக்கை வென்றெடுக்க இந்தத் தீர்ப்பு வழிகாட்டி இருக்கிறது!

மாநில சுயாட்சியைப் பெறுவோம்!

கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# தமிழ்நாடு முழுவதும் 86,000 பேருக்கு பட்டா: ஆண்டு வருமானம் ரூ.5 லட்சமாக உயர்வு!

### தமிழ்நாடு அரசு — அரசாணை வெளியீடு

**சென்னை, ஏப். 29 -**

**தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. வருமான உச்சவரம்பு 3 லட்சமாக இருந்தது. தற்போது 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

சென்னையை சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் ‘பெல்ட் ஏரியா’ என்று கூறப்படும் 32 கி.மீ. பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து நீண்டகாலமாக குடியிருப்பவர்கள் பட்டா பெற முடியாமல் சிரமப்படுகின்றனர். இவ்வாறு ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு பகுதிகளில் 29,187 பேர் பட்டா இன்றி குடியிருக்கின்றனர். இது முதல்வரின் கவனத்துக்கு சென்றதை அடுத்து, இவர்களுக்கு பட்டா வழங்க அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர்.

பெல்ட் ஏரியா சட்டம் கடந்த 1962ம் ஆண்டு வந்தது. 1962 முதல் 2025 வரை அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில், பட்டா வழங்கும் பணிகளை 6 மாதங்களுக்குள் முடிக்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதற்காக, மாவட்ட அளவில் ஒரு குழுவும், சென்னையில் மாநில அளவில் ஒரு குழுவும் அமைத்து உடனடியாக அந்த பணிகளை தொடங்கவும் அறிவுறுத்தியுள்ளார். 4 மாவட்ட மக்களுக்கும் இது மிகப் பெரிய வரப்பிரசாதம்.


**மதுரை - நெல்லை மாநகராட்சிகள்!**

மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளிலும் இதேபோல பிரச்சினை இருக்கிறது. அங்கு இருப்பவர்களுக்கும் பட்டா வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். குறிப்பாக, மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட தலைநகரங்களில் ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு பகுதிகளில் குடியிருந்து வரும் 57,084 பேருக்கு பட்டா வழங்க அறிவுறுத்தியுள்ளார்.

அந்த வகையில், சுமார் 86 ஆயிரம் பேருக்கு 6 மாதங்களுக்குள் பட்டா வழங்குமாறு முதல்வர் அவர்கள் கூறியிருந்தார். இதுதவிர, யாராவது விடுபட்டிருந்து மனுக்கள் கொடுத்தால் அதையும் பரிசீலிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

**அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்!**

இதை தொடர்ந்து தற்போது சென்னை மற்றும் மதுரை உள்ளிட்ட சில மாநகராட்சி பகுதிகளில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதென முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பட்டா வழங்குவதற்கான கணக்கெடுப்புப் பணிகளை வருவாய்த் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வந்தனர்.



ABSTRACT

Land – Regularization of Residential encroachments and issuance of Free House Site Patta – Chennai City and its belt area (Chengalpattu, Kancheepuram and Tiruvallur areas) – As per ban imposed in G.O.(Ms) No.1135, Revenue Department dated 17.03.1962 for Chennai and its belt area – One Time Relaxation and Regularisation of residential encroachments in unobjectionable Porambokes within 16/8 km radius from District Head Quarters, Corporations, Municipalities and Town Panchayats – One Time Relaxation of ban as per RSO 21(1) – Orders issued in G.O.(Ms) No.97, Revenue and Disaster Management Department, dated: 21.02.2025 – Certain Amendments – Orders – Issued.

Revenue & DM [LD-1(1)] Department

G.O.(Ms) No.205

Dated: 26.04.2025
ஸ்ரீவிசுவாவசு வருடம், சித்திரை 13
திருவள்ளுவர் ஆண்டு 2056

Read:

1. G.O.(Ms) No.97, Revenue and Disaster Management Department, dated: 21.02.2025.
2. Cabinet Resolution dated 17.04.2025.
3. From the Commissioner of Land Administration Letter No.F3/ 11339/2018, Dated: 22.04.2025.

*****

ORDER:

In the reference first cited above, the Government have issued orders vide G.O.(Ms) No.97, Revenue and Disaster Management [LD-1(1)] Department, Dated: 21.02.2025 for one time relaxation of the ban imposed on issuance of house site assignments in Chennai and its Belt Areas and within the limits of District Head Quarters/ Corporation, Municipalities and 16Km / 8Km distance from the periphery of the District Head Quarters/ Corporation, Municipalities, Town Panchayat for regularization of residential encroachments which have been in existence for more than 10 years/5 years respectively in unobjectionable Government Poramboke lands under Special Regularization Scheme.

A few representations and feedback were received with reference to the implementation of One-time Special Regularization Scheme.

(a) The maximum extent prescribed for the regularization and grant of free House Site Patta in Chennai, Avadi and Tambaram Corporation limits may be enhanced from 1 Cent to 2 Cents, on par with the extent permitted in other corporations.

(b) As per the G.O.(Ms) No.318 Revenue & Disaster Management Department dated 30.08.2019, the Government had fixed the Annual Income Limit at Rs.3,00,000/- as the income limit for free house site patta to encroachers. Since the Government Orders were issued more

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் வசிக்கும் 86ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், 532 கிராமங்களை சேர்ந்த, 29ஆயிரத்து 187 குடும்பங்கள், பிற மாவட்டங்களில், 57ஆயிரத்து 84 குடும்பங் களுக்கு பட்டா வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

சில வகை புறம்போக்கு நிலங்களில், 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்போருக்கு பட்டா வழங்க, ஆண்டு வருமானம், 3 லட்சம் ரூபாயாக இருந்தது. இந்த வரம்பு தற்போது, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு - அரசாணையை வெளியிட்டுள்ளது.